தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY MAY 25, 2023
வியாழக்கிழமை மே 25, 2023 | ஒளி: 09 கதிர்: 004 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# ஜெரோம் குறித்து விசாரணைகள்

## சட்டமா அதிபர் அறிவிப்பு

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துகள் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றுக்கு புதன்கிழமை (24) அறிவித்தது.

மதங்களை புண்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்து, சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள்மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

போதகருக்கு எதிராக சட்டத்தை அமல்படுத்துவதற்கு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிய மனு, எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நவனத்ன மேற்குறிப்பிட்ட விடயத்தை மன்றுக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2



புத்தகப் பை, சப்பாத்து

## விலைகளை 10% ஆல் குறைக்க இணக்கம்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புத்தகப் பை மற்றும் சப்பாத்து என்பவற்றின் விலைகளை எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி முதல் குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பணிப்பெண் மரணம் குறித்து பாரபட்சமின்றி விசாரணை



பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த பதுளையைச் சேர்ந்த வீட்டுப் பணிப் பெண்ணான ராஜன் ராஜகுமாரியின் மரணம் தொடர்பில், எத்தகைய பாரபட்சமும் இன்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சட்டத்துக்கு முரணாக எதுவும் இடம்பெறாது என்றும் சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது என்பதை தான் உறுதிப்படுத்துவதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அமெரிக்க டொலருக்கு நிகராக

## வலுவடைகிறது இலங்கை ரூபாய்



இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (24) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

## 'மைக் டைசன்' ராஜபக்ஷ சார்பாளர்

### நற்சான்றிதழ் வழங்க முடியாது என்கிறது ஜே.வி.பி



ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தான் ஜனக ரத்நாயக்கவை 'மைக் டைசன்' என புகழ்பாடி கொண்டு வந்தார்கள் என்றும் ராஜபக்ஷர்களுக்கு சார்பாகவே செயற்பட்ட அவருக்கு எம்மால் நற்சான்றிதழ் வழங்க முடியாது என்றும் மக்கள் விடுதலை முன்னணியின்

தொடர்ச்சி P2



பணிப்பெண் மரண விவகாரம்

## நடிகையைப் பார்த்து மயங்கி விட்டனர்

### நீதி கோரி எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

கொழும்பில் நடிகை சுதர்மாவின் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய பதுளை, தெமோதர பகுதியைச் சேர்ந்த ராஜன் ராஜகுமாரி என்ற பெண் மரணமடைந்த சம்பவத்தில், பொலிஸ் நிலையம் சென்ற நடிகையைப் பார்த்தது பொலிஸார் மயங்கிவிட்டனர் என்றும் மரணத்துக்கு நீதி வேண்டும் என்றும் எதிர்கட்சிகள் வலியுறுத்தின.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றம் புதன்கிழமை (24) கூடியது போது, விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "பதுளை தெமோதர பிரதேசத்தைச் சேர்ந்த ராஜகுமாரி என்ற பெண் கொழும்பில் நடிகை சுதர்மா நெத்திகுமார என்ற நடிகையின்

தொடர்ச்சி P2

புத்தளம் ஆசிரியர் மீது தாக்குதல்

## 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்



ஒழுக்கத்துடன் பாடசாலைக்கு வருமாறு மாணவர்களை எச்சரித்ததையடுத்து ஆத்திரமடைந்த மாணவர்கள், ஒழுக்காற்று ஆசிரியரின் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மாணவர்கள் நால்வரும் எதிர்வரும் 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. புத்தளம், திலடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

ஜனக்க நீக்கப்பட்டார்

## 123 ஆதரவு: 77 எதிர்ப்பு



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக்க ரட்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பாராளுமன்றத்தில் முன்வைத்தார். அதனை வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரினார்.

தொடர்ச்சி P2

## மின் கட்டணம் 23% ஆல் குறையும்



"ஜூலை மாதம் மின்சார கட்டணம் குறைந்தபட்சம் 23 சதவீதத்தால் குறைக்கப்படும்" எனத் தெரிவித்துள்ள மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணங்கள் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கொரோனாவை விட ஆபத்தான

## பெருந்தொற்று பரவும் வாய்ப்பு

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

### புதிய தொற்றின் உயிர்ச்சேதம் கொரோனாவை விஞ்சும்



கொரோனா தொற்றால் உலகம் முழுவதும் 2 கோடி பேர் வரை உயிரிழந்துள்ள நிலையில், அதனை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான தொற்றுநோய் பரவ வாய்ப்புள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## தற்கொலை குண்டுதாரிக்கு வாழ்நாள் சிறைதண்டனை

கொழும்பில் எங்காவது தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு வெடிமருந்துகள் மற்றும் மைக்ரோ ரக கைத்துப்பாக்கி, கைக்குண்டு ஆகியவற்றை தம்வசம் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர், குற்றவாளியாக இனங்காணப்பட்டு வாழ்நாள் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2


## சாட்சியங்களை இட்டுக்கட்டல் அடிப்படை உரிமைகள் மீறல்



சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சில காரணங்களுக்காக சாட்சியங்களை இட்டுக்கட்டி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இது பாரதூரமான அடிப்படை உரிமைகள் மீறலாகும் என்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 6 பொருட்களின் விலைகள் குறைப்பு



பால் மா உள்ளிட்ட ஆறு பொருட்களின் விலைகளை புதன்கிழமை (24) முதல் அமலாகும் வகையில் குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜெரோம் குறித்து விசாரணைகள்

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பியதும் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு ஜெரோம் பெர்னாண்டோ என்ற போதகரால் பிற மதங்களை அவமதிக்கும் வகையில், கருத்துகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து போதகருக்கு எதிராக பலரும் முறைப்பாடு செய்தனர்.

போதகரின் வாக்குமூலங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனக்க நீக்கப்பட்டார்: 123 ஆதரவு; 77 எதிர்ப்பு

அதனடிப்படையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 77 என்ற வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்த பதவி நீக்கப் பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையின் பாராளுமன்றம், முதன்முறையாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்ற சுயாதீன ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2021 மார்ச் 14ஆம் திகதியன்று ஜனக்க ரட்நாயக்கவை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவவிசாளராக நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விலைகளை 10% ஆல் குறைக்க இணக்கம்

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், புத்தகப் பை மற்றும் சப்பாத்து என்பவற்றின் விலைகளை 350 முதல் 450 ரூபாயால் குறைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் பின்னர் சலுகைகளை வழங்குவது குறித்து அமைச்சர் விடுத்த கோரிக்கையை அடுத்தே உள்ளூர் உற்பத்தியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இன்னும் ஒரு மாதத்தில் உற்பத்தியாளர்களுடன் விலைகள் தொடர்பாக மீளாய்வுக் கூட்டம் நடத்தப்படும் என்றும், அதில் நிலவும் சந்தை நிலைவரங்கள் மற்றும் டொலரின் மாற்று விகிதங்களுக்கு ஏற்ப மேலும் விலை குறைப்பு குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## பணிப்பெண் மரணம் குறித்து பாரபட்சமின்றி விசாரணை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், விமல் வீரவன்ச உள்ளிட்ட பலரும் ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்வாறு தெரிவித்தார்.

"எத்தகைய பாரபட்சமும் இன்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படும். சந்தேகம் வேண்டாம் உறுதியாக கூறுகின்றேன். நீங்கள் இந்தப் பிரச்சினையை முன்வைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாகவே நான் தொலைபேசி மூலம் அது தொடர்பில் உத்தரவுகளை பிறப்பித்துள்ளேன்.

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அது தொடர்பில் விடயங்களை சபையில் முன்வைத்துள்ளார். அந்த விடயங்களையும் நான் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன். சுயாதீனமாக அந்த விசாரணைகள் நடைபெறும். அது தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை" என்றார்.

## நடிகையைப் பார்த்து மயங்கி விட்டனர்

வீட்டிலே பணி புரிந்துவந்த நிலையில் அவர் மரணித்துள்ளார். அவரை கொலை செய்ததாகவே நாங்கள் தெரிவிக்கிறோம்.

குறித்த பெண் மரணமடைந்த நிலையில் எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் அவரின் சடலம் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

அவரின் மரணம் தொடர்பாக பக்கச்சார்ப்பற்ற விசாரணை இடம்பெறவேண்டும். அதற்காக பெண்ணின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து, பேராதனை பல்கலைக்கழகத்தின் சட்ட மருத்துவ பீடத்துக்கு அனுப்பி, சுயாதீன விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும்" என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவிக்கையில், "மனோ கணேசன் எழுப்பிய பிரச்சினை உணர்வு பூர்வமானது. இந்தப் பிரச்சினையை எவருக்கும் புறக்கணித்து செல்ல முடியாது.

சுதர்மா பொலிஸ் நிலையத்தில் இருக்கும் நிலையில், அவருக்கு முன்னாலேயே அந்தப் பெண்ணை பொலிஸார் தாக்கி இருக்கிறனர். இதனை பார்த்துக்கொண்டு சுதர்மா தொலைபேசியில் தனது நண்பர்களுக்கு அறிவித்திருக்கிறார். பொலிஸ் நிலையத்தில் யாரையும் அடித்து கொலை செய்ய முடியாது. எனவே குறித்த பெண்ணுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

பொருளாதார கஷ்டம் காரணமாகவே மலையத்தில் இருக்கும் மக்கள் கொழும்புக்கு வேலைக்கு வருகின்றனர். அதனால் மரணித்துள்ள பெண்ணின் மரணம் தொடர்பாக பக்கச்சார்ப்பற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"மலையகத்தில் இருந்து கொழும்புக்கு வரும் அந்த மக்களுக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகம் அந்த மக்களுக்கு இருந்து வருகிறது. அதனால் இது தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு அப்பெண்ணின் குடும்பத்துக்கு நீதி வழங்க வேண்டும்" என்று சஜித் மேலும் தெரிவித்தார்.

## மின் கட்டணம் 23% ஆல் குறையும்

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "எரிபொருள், நிலக்கரி ஆகியவற்றின் விலை குறைப்பின் பயனை மக்களுக்கு வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளோம். மின்கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனக ரட்நாயக்க குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது. 0-30 வரையான மின் அலகுக்கான கட்டணத்தை எதிர்வரும் ஜூலை மாதம் குறைந்தபட்சம் 23 சதவீதத்தாலும், 31-60 வரையான மின்னலகுக்கான கட்டணத்தை 9 சதவீதத்தாலும் குறைக்கவுள்ளோம். அத்துடன், வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணங்கள் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படும்.

0 - 30 வரையான அலகுக்கான விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு, அலகொன்றின் விலை 25ஆக புதிய திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. இதேவேளை, நிலையான கட்டணத்தை 400 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. 0 - 30 அலகுகள் வரை பயன்படுத்தும் 15,646 மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணத்தை 23 சதவீதத்தால் குறைக்கவும், 31 - 60 அலகுகள் வரை பயன்படுத்தும் 10,692 மத வழிபாட்டுத் தலங்களுக்கு 7 சதவீதத்தால் கட்டணத்தை குறைக்கவும், உணவக பிரிவினருக்கு 29 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை மின்சார கட்டணத்தை குறைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது என்றார்.

## வலுவடைகிறது இலங்கை ரூபாய்

அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 297 ரூபாய் 98 சதமாகவும் விற்பனை விலை 311 ரூபாய் 23 சதமாகவும் பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை (23) கொள்வனவு விலை 299 ரூபாய் 19 சதமாகவும் விற்பனை விலை 312 ரூபாய் 33 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மே மாதம் 18ஆம் திகதியன்று டொலரின் கொள்வனவு விலை 300 ரூபாயை விட குறைவடைந்ததுடன், 13 மாதங்களின் பின்னர் 300 ரூபாயை விட குறைந்திருந்தது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்

புத்தளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஒழுக்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் எச்.எம்.அஸ்கியின் வீட்டுக்குள் புகுந்தே ஆசிரியரை மாணவர்கள் தாக்கியுள்ளனர்.

இவ்வருடத்திற்கான கல்வி பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் குழுவால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

## பெருந்தொற்று பரவும் வாய்ப்பு

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்த ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், அந்தத் தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு உலக நாடுகள் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

புதிய பெருந்தொற்று கொரோனா பெருந்தொற்றை விட அதிக உடல் பாதிப்புகளையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தும் என்பதால், அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக வேண்டும் என்றார்.

கொரோனா பெருந்தொற்று இனி உலகுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்றும் அந்தப் பெருந்தொற்று மறைந்துவிடவில்லை என்றும் தொலைவில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றத் தொடங்கியதும் அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக இருக்கவில்லை என்றும் அதன் காரணமாக அது மிகப் பெரிய சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியது என்றும் சுட்டிக்காட்டினார்.

புதிய தொற்றுநோயும் வீழ்த்தக் கூடியதாக இருக்காது என்றும் அது நமது கதவை தட்டப் போகிறது என்றும் தெரிவித்த அவர், நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிட்டால் நிலைமை மோசமாகும் என்றார்.

## சாட்சியங்களை...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நடைபெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயாதீன ஆணைக்குழுவின் தவிசாளர் ஒருவரை நீக்குவதற்காக பாராளுமன்றத்தில் இவ்வாறு தீர்மானம் கொண்டு வருவது இதுவே முதற்றடவையாக உள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் குறைகளை கண்டுபிடிப்பது, அவர்களின் செயற்பாடுகளை தடுப்பதற்கான முயற்சியாக இருக்கின்றது.

நிறைவேற்றுத்துறைக்கு எதிராக அந்தக் ஆணைக்குழுக்கள் செயற்படும் போது, இவ்வாறான செயன்முறையை செய்கின்றனர். நிலையியல் கட்டளைகளில் இந்தச் செயன்முறைகள் தொடர்பில் திருத்தங்களை கொண்டு வர வேண்டும். பதிலளிப்பதற்கு தவிசாளருக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அவர் பாவனையாளர்களின் உரிமைகளை பாதுகாக்க முயன்றுள்ளார். இவ்வாறான நிலைமையிலேயே அவரை பதவி நீக்க முயலப்படுகின்றது.

இதேவேளை ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. 20 மாதங்களுக்கும் மேலாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இதேவேளை கவிஞர் ஒருவரும் தடுத்து வைக்கப்பட்டார். இந்நிலையில் தொடர்ந்தும் இந்தச் சட்டம் தவறாக பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் சட்டம் தொடர்பில் ஜெனீவாவிலும் பேசப்படுகின்றது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் வழக்கில் மூன்று பேரை சீஐடியினர் சாட்சியங்களாக கைது செய்து அவர்களை அச்சுறுத்தினார்கள். இதன்போது ஹிஸ்புல்லாவுக்கு எதிராக சாட்சியங்களை இட்டுக்கட்டினார்கள். சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங்கத்தின் ஆலோசகராக இருக்கின்றது" என்றார்.

## 'மைக் டைசன்' ராஜபக்ஷ சார்பாளர்

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனக ரத்நாயக்க என்ற தனிநபர் தொடர்பில் எமக்கு எந்த கருத்தையும் குறிப்பிட முடியாது. ஆனால், சுயாதீன ஆணைக்குழு அரசாங்கத்தின் தேவைக்கு அமைய செயற்பட முடியாது. சுயாதீன ஆணைக்குழுக்களை பாதுகாப்பதற்காக ஜனக ரத்நாயக்கவின் விவகாரத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவே செயற்படுவோம் என்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை பதவி விலகுமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழுத்தம் பிரயோகித்துள்ளார்.

அரசியல் அழுத்தத்துக்கு மத்தியில் தான் உறுப்பினர்கள் பதவி விலகினார்கள். இதனை தொடர்ந்தே ஜனக ரத்நாயக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஜனக ரத்நாயக்கவுக்கு நாங்கள் நற்சான்றிதழ் வழங்க போவதில்லை. இவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில், நிதி நிறுவனங்களின் தலைவர், பிரதானியாக பதவி வகித்தார். அதன் வழக்கத்தில் தான் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தான் ஜனக ரத்நாயக்கவை 'மைக் டைசன்' என புகழ்பாடி கொண்டு வந்தார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை. வழமை போல் பதவி விலகுமாறு அரசாங்கம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தது. இதனை தொடர்ந்து ஆணைக்குழுவின் ஒருசில உறுப்பினர்கள் பதவி விலகினார்கள். ஆனால் தவிசாளர் பதவி வகித்த ஜனக ரத்நாயக்க மாத்திரம் பதவி விலகவில்லை.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகினார்கள் என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகித்த சார்ள்ஸ் கடந்த ஜனவரி மாதம் பதவி விலகினார். சுய விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகியாக குறிப்பிட்டார். ஆனால் தற்போது அவர் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆகவே இது எவ்வகையான அரசியல் என்பதை அரசியல் ஞானம் உள்ளவர்கள் நன்கு அறிவார்கள்.

மின்கட்டண அதிகரிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கும் போது, ஆணைக்குழுவின் தவிசாளர் மாத்திரம் எதிர்ப்பு தெரிவித்தார் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்தார்.

2002 ஆம் ஆண்டு தனக்கு ஆதரவாக செயற்பட்ட டக்லஸ் நாணயக்கார என்பரை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமித்தார். இதன் பின்னரே மின்கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியது" என்றார்.

## தற்கொலை குண்டுதாரிக்கு வாழ்நாள் சிறைதண்டனை

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்தவே, கடூழிய சிறைத்தண்டனையுடன் கூடிய வாழ்நாள் சிறைத்தண்டனையை செவ்வாய்க்கிழமை (23) விதித்துள்ளார்.

பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முறைப்பாட்டாளர் தரப்பினர் எவ்விதமான சந்தேகமும் இன்றி நிரூபித்துள்ளமையை உறுதிப்படுத்திய நீதிபதி மேற்கண்ட தண்டனையை விதித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினரான தங்கவேலு நிமலன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை பிரதேசத்தில் வைத்து மேற்படி வெடிபொருட்களுடன் இவர் 2009 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டார். அதில் சி-4 வகையைச் சேர்ந்த அதிசக்தி வாய்ந்த வெடிப்பொருள் ஒன்றரை கிலோ கிராம் இருந்துள்ளது. அதுமட்டுமன்றி கைக்குண்டையும் தம்வசம் வைத்திருந்தார்.

இவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இன்றைக்கு 14 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட இந்தக் குற்றம் கடுமையானது. ஆகையால், குற்றவாளிக்கு கடுமையான தண்டனையை வழங்கவேண்டுமென சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்ட ஜெனரல் நீதிமன்றத்திடம் கோரிநின்றார்.

## 6 பொருட்களின் விலைகள் குறைப்பு

அதற்கமைய 1,080 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் லங்கா சதொச பால்மாவின் விலை 50 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 1,030 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செத்தல் மிளகாய், சிவப்பு பருப்பு, சோயாமீட், வெங்காயம், வெள்ளை சீனி ஆகியவற்றின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒரு கிலோ கிராம் செத்தல் மிளகாய் 1,350 ரூபாய்க்கும் சிவப்பு பருப்பு 325 ரூபாய்க்கும் சோயாமீட் 660 ரூபாய்க்கும், வெங்காயம் 129 ரூபாய்க்கும் வெள்ளை சீனி 239 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் கைது:

# பொலிஸாரின் அராஜகத்துக்கு கண்டனம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

■ கனகராசா சரவணன்

தமிழர் தாயகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக் கோரி, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தாக்கி, ஒன்பது பேரை கைது செய்த அராஜகத்தை வன்மையாகக் கண்டிப்பதாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி, கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில், கட்சி உயர்பீட உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தாக்கியதுடன் சட்டத்தரணி சுகாஷ், திலீபன், தீசன், ராஜீப், சுதாகரன், கோபி, சற்குணதேவி, தமிழ்மதி, ராஜீ கலைவாணி உட்பட ஒன்பது பேரை, பலாலி பொலிஸார் கைது செய்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களில் புத்தர் சிலை அமைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் தொல்லியல் இடங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் காணிகள் இலக்கு வைக்கப்பட்டு, அபகரிக்கப்படும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

எனவே, கடன் இல்லாத நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமாக இருந்தால் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான இன முரண்பாடு நீக்கப்படவேண்டும்; தமிழ் மக்களின் தேசம், சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்படவேண்டும். அதுவரை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம் தொடரும் என்றார்.

# தொழிலாளியின் முகத்தை விராண்டிய சிறுத்தை

■ எஸ்.சதீஸ், கௌசல்யா, ரஞ்சித் ராஜபக்ஷ

சிறுத்தை தாக்குதலில் படுகாயமுற்ற தோட்டத் தொழிலாளி, பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்தியர் எஸ்.ஏ.கே ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பிரிட்வெல் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போதே, புதன்கிழமை (24) காலை 10.30 மணியளவில் தோட்டத் தொழிலாளி, சிறுத்தை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அந்தச் சிறுத்தையை காட்டுக்குள் விரட்டியடிக்குமாறு நல்லத்தண்ணி வனசீவராசிகள் அலுவல உத்தியோகத்தர்களுக்கு தெரிவித்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வைகாசி பொங்கல் விழா

■ அ. அச்சுதன்

திருகோணமலை, ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் வருடாந்தப் பொங்கல் விழா 'வேதாகமமாமணி' பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் தலைமையில் திங்கட்கிழமை (29) நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 3.00 மணியளவில், வளந்து வைக்கும் வைபவமும் இரவு 6.00 மணிக்கு பொங்கல் பூசையும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் முன்னதாகவே ஆலயத்துக்கு வந்து, தத்தமது நேர்த்திகளை முடித்து, பொங்கல் விழாவில் கலந்து அம்பாளின் திருவருளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பால் நிலை அடிப்படையிலான

# வன்முறைகளை குறைப்பதற்கான மாவட்ட வலையமைப்புக் கூட்டம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டதில் பால் மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகளை குறைப்பதற்கான மாவட்ட வலையமைப்புக் கூட்டம், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்றது.

மாவட்டத்தில் பால்நிலை சமத்துவத்துக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல் மற்றும் சிறுவர், பெண்கள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது.

மாவட்டத்தில் காணப்படுகின்ற பெண்கள் காப்பகத்தில் உள்ளவர்களை பராமரித்து, அவர்களுக்குத் தேவையான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவர்களை குடும்பத்துடன் இணைப்பாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

# 11 பேரை பதம்பார்த்த குளவி

■ ராமு தனராஜா

பண்டாரவளை, ஓபதெல்ல வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்கள் உட்பட 11பேர் குளவிக்கொட்டுக் இலக்காகி, பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கானவர்களில் 6 பாடசாலை மாணவர்களும் 5 பெற்றோரும் அடங்குவதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.




# வவுனியாவில் மாணவர்களின் பேரணி

■ க. அகரன்

வீதி பாதுகாப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி வவுனியாவில் நேற்று (24) இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ. லோகேஸ்வரன் ஆலோசனையில், பாடசாலை வீதி பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் விழிப்புணர்வு ஊர்வலம், பாடசாலை முன்றலில் ஆரம்பமாகி மணிக்கூட்டு சந்தி வரை சென்று, அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என 800 பேர் வரையில் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில்

# 55 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

■ ஹஸ்பர்

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில், முதற்கட்டமாக 55 பட்டதாரிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற, இந்நிகழ்வில் ஆளுநர் செந்தில் தொண்டமான் உரையாற்றும்போது, கூறியதாவது:

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் போக்குவரத்து கட்டணங்கள் உயர்வாக உள்ளன. இதனால், நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்களின் நலன்கருதி இருப்பிடங்களுக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருக்குமானால் அங்கு கடமைக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எதிர்வரும் ஓராண்டில், 10 பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.



# அங்குரார்ப்பணம்

■ எஸ். கார்த்திகேசு

அம்பாரை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்தில் பிரதான வீதி, தம்பட்டை கிராமத்தில் ஆதிசைவ சிவப்பிராமணர் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வும் சங்கத்துக்கான அலுவலகத் திறப்பு விழாவும் நடைபெற்றன.

இந்நிகழ்வானது கிழக்கிலங்கை ஆதிசைவ சிவப்பிராமணர் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இரா நீதிராஜசர்மா குருக்கள் தலைமையில் தம்பட்டையில் நேற்று முன்தினம் (23) வைபவ ரீதியாக நடைபெற்றன.

வரலாற்றுத் தொன்மைமிக்க திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோவிலுக்கு பூஜை செய்வதற்காக, இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட 'தம்பட்டர்கள்' என அழைக்கப்பட்ட குருமார்கள், கோவிலின் வடக்கு திசையில் குடியமர்த்தப்பட்டு, கோவில் பூஜைகளை முன்னெடுத்து வந்தனர். இதன் காரணப் பெயராக, தம்பட்டர்கள் வாழ்ந்த இடம் 'தம்பட்டை' என அழைக்கப்பட்டு வருகின்றது.




அந்த மரபில் வந்தவர்களான ஆதிசைவ சிவப் பிராமணர்களின் குரு பரம்பரையின் ஊடாக, வேதாகமங்களை முறையாகப் பயிற்றுவித்து, எதிர்காலத்தில் ஆதிசைவ சிவப்பிராமண குரு பரம்பரையை வளர்த்தெடுக்கும் நோக்கில், இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இரா நீதிராஜ சர்மா குருக்கள் தெரிவித்துள்ளார்.

இணைந்த வடக்கு – கிழக்கில் மீளப் பெற முடியாத

# சமஷ்டி தீர்வே தேவை

## காரைதீவு செயலமர்வில் தீர்மானம்

■ வி.ரி சகாதேவராஜா

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாத, சமஷ்டி முறையிலான தீர்வை வழங்க வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வு திங்கட்கிழமை (22) காரைதீவில் நடைபெற்றது.

இச் செயலமர்வு, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டது. செயலமர்வில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா உரையாற்றும்பொது கூறியதாவது:



"கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான தீர்வை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதிநாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான வள நிலையம் மேற்கொண்டு வருகிறது" எனவும் தெரிவித்தார்.

இதன்போது, அகம் மனிதாபிமான வளநிலையத்தின் பிரதி இணைப்பாளர் அழகுராசா மதனும் வரைவு தொடர்பான தெளிவூட்டலை வழங்கியதுடன் அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனமும் நிகழ்வு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள மூலிகைத் தோட்டங்களில், மூலிகைத் தாவரங்களை நாட்டி, சரியான முறையில் பராமரித்து அதன் பயன்பாட்டுப் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, திருகோணமலை கப்பல்துறையில் நான்கு ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும், வாகரையில் ஒன்றரை ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும் மூலிகைப் பயிர்களை நாட்டி, அதைப் பராமரித்து, அதன் மூலம் கிடைக்கின்ற மூலப்பொருட்களை சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு வழங்கக்கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.




இதில் ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 026 - 222 5993, 026 - 222 5639, 026 - 222 5640 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# யாழில் பயணிகள் படகு விபத்து

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் இருந்து குறிக்கட்டுவான் வரையிலும் பயணித்த பயணிகள் படகு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. அதில் பயணித்தவர்களை இலங்கை கடற்படையினர் மற்றும் மீனவர்களின் மீன்பிடி படகுகளின் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவில் இருந்து சமுத்திராதேவி என்ற பயணிகள் படகு, குறிக்கட்டுவானை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது. எனினும், கடலின் இடைநடுவில் அந்தப் படகின் சுங்கான் செயற்படவில்லை. இதனால், அந்தப் படகு மூழ்கும் அபாயத்தில் இருந்ததாக பயணிகள் அச்சமடைந்தனர்.

இதுதொடர்பில் கடற்படையினரின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்து,



விரைந்து செயற்பட்ட கடற்படையினரும் மீனவ படகுகளும், சமுத்திராதேவி படகில் இருந்த 70 பயணிகளை காப்பாற்றி குறிக்கட்டுவான் ஜெட்டிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின்

# உப தலைவராக ஏ.சீ அன்வர் தெரிவு

■ நூறுல் ஹுதா உமர்

அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உப தலைவராக நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் 26 ஆவது



தேசிய மாநாடு, 02.05.2023 ஆம் திகதி நடைபெற்ற போதே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராக செயற்பட்டு வருகிறார். தனது 29 வருட கால சேவையினுள் அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது, நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றியுள்ளார்.

# முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய மக்கள் பிரதிநிதிகள்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவிவிலகுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட ‘அரகலய’வின் (போராட்டம்) இறுதியாக ஒலித்த குரல், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பேரும் கள்வர்கள்; அவர்கள் அனைவரும் பதவிவிலக வேண்டும் என்றது. அது பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும்.

எனினும், சட்டவாக்க சபையை பாதுகாத்து கொள்ளும் வகையில், அப்போது பிரதமராகப் பதவிவகித்த, இந்நாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்துக்கு கடுமையான பாதுகாப்பை வழங்கி, அதைப் பாதுகாத்தார். இல்லையேல், பேராட்டக்காரர்கள் அதையும் சூழ்ந்து, தாக்கி, அழித்து இருப்பார்கள்.

மக்கள் பிரதிநிதிகளை ‘கள்வர்’கள் எனக் குற்றஞ்சாட்டி, உரக்கக் குரல்கொடுத்த போராட்டக்காரர்களில் பலர், பல்வேறான குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவேளையில், ஆட்சியை அவர்கள் கவிழ்த்து இருந்தால், மோசமானவர்களின் கைகளுக்குள் ஜனநாயகம் சிக்கி, சின்னாபின்னமாகி இருக்கும்.

முறைகேடாக நிதி சேகரிப்போர், தரகு பணமின்றி சேவை செய்யாதவர்கள், மக்களின் வரிப்பணத்தை நாசம் செய்வோர், போதைப்பொருள் வர்த்தகர்கள் என பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பொதுமக்கள் பொதுவான குற்றச்சாட்டுகளை முன்வைத்துக்கொண்டுதான் இருகின்றனர். ஒருசில எம்.பிக்களுக்கு அது விதிவிலக்காகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது மக்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹீம், சுமார் மூன்றை கிலோ கிராம் தங்கம், அதிவிலை கூடிய அலைபேசிகளை நாட்டுக்குள் கடத்த முயன்று சிக்கிக்கொண்டார். தனது தவறுக்கு தண்டப்பணத்தை செலுத்திவிட்டு, வெளியேறியும் விட்டார்.

விமான நிலையத்தில், அதிவிசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் வழியை பயன்படுத்தி, தங்கம் கடத்தப்பட்டமை இது முதலாவது சந்தர்ப்பமல்ல. ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சி நடைபெற்று கொண்டிருந்தது. அப்போது, ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஹேவாஹெட்ட தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர டானியல், தங்கம் கடத்தி வந்த குற்றச்சாட்டின் கீழ் விமான நிலையத்தில் 1978ஆம் ஆண்டு சிக்கிக்கொண்டார்.

அரசாங்கத்தின் அதிகூடிய பெரும்பான்மையை பயன்படுத்தி அவரை, ஜே.ஆர் காப்பாற்றி இருக்கலாம். எனினும், தனது கட்சிக்காரர் என்று கூடப் பார்க்காது ‘பாராளுமன்ற உறுப்பினர்’ என்ற கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படும் வகையில் நடந்து கொண்டமைக்காக, அநுர டானியலின் பதவியைப் பறித்து, அவரைக் கடுமையாகத் தண்டித்தார்.

எனினும், தண்டப்பணத்தை செலுத்திய அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக, எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தங்கம் கடத்திய எம்.பிக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென ஆளும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், சபையின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தனர்.

எனினும், எவ்வாறான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர், மக்கள் பிரதிநிதியாகவே இன்னுமிருக்கின்றார். இது ஏனையோருக்கு ஓர் இழுக்காகும் என்பதுடன், மற்றையவர்களுக்கும் மக்களுக்கும் முன்னுதாரணமாக மக்கள் பிரதிநிதிகள் செயற்படவேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சுயகௌரவத்தை இழப்பவர்கள், ஏனைய தனிநபர்களின் சுதந்திரத்தையும் தடுக்க முனைவார்கள். இது தானும் அழிந்து, மற்றவர்களையும் அழிக்கும் செயலாகும்.

உயிரிலும் மேலானது சுயகௌரவமாகும். மனிதன் உயர்நிலையை அடைய, கௌரவமான வாழ்க்கையை நோக்கி நடைபயில வேண்டும். எந்த இடையூறு நேர்ந்தாலும், வீறுநடை போடுவதே முன்னேற்றத்துக்கான ஒரே வழியாகும்.

விழிகளை நேரே பதித்து, அக்கம் பக்கத்தை நோக்காது, போகின்ற வழி மட்டுமே, பார்வையில் துலங்க வேண்டும். எடுத்த காரியத்தைவிட, புதிதாக, புரியாத செயலில் சிக்கிக்கொள்ள வேண்டாம்.

எதிலும் அவசரம் தேவையில்லை. நிதானம் மேலானது. கருமங்களில் சிரத்தை, அனுபவங்களைத் தேடுதல் முக்கியமானது. போராடாமல் எதுமே நடக்காது. முயற்சிகளும் போராட்டம் போன்றதே! முடியும் என்பவர்கள், முடியாது என எண்ணக்கூடாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்



புருஜோத்தமன் தங்கமயில்


# மஹிந்தவின் பிரதமர் கனவை கண்டுகொள்ளாத ரணில்

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்கப்போகிறார் எனும் தகவல், அண்மைக்காலமாக அடிக்கடி பரவி வருகின்றது. கடந்த வாரத்தில், பதவி ஏற்பதற்காக அவர் தன்னுடைய வீட்டிலிருந்து, ஜனாதிபதி செயலகம் நோக்கி புறப்பட்டுவிட்டார் என்பது வரையில் வதந்தி பரவியது. இந்த வதந்தி பரவிக் கொண்டிருந்த போது, அவர் மாத்தறையில் ஒரு குடும்ப நிகழ்வில் பங்குபற்றிக் கொண்டிருந்தார். ஆனால், மஹிந்த மீண்டும் பிரதமராக பதவி ஏற்கப்போகிறார் என்ற தகவல்கள் அடிக்கடி வெளியாவதன் பின்னால், வதந்தியைப் பரப்புவர்களைக் காட்டிலும், மஹிந்த வாதிகளே அதிகம் இருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த தேர்தல் வெற்றிகளை கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷர்கள் பெற்றார்கள். குறைந்தது ஒரு தசாப்த காலம் ஆட்சியில் இருந்து, அவர்களை அகற்ற முடியாது என்று நம்பப்பட்டது. ஆனால், யாருமே எதிர்பார்க்காத வண்ணம் ‘ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும்’ போராட்டம், முழு நாட்டையும் புரட்டிப் போடுமளவுக்கு எழுந்து.

அதனால், வேறு வழியின்றி ராஜபக்ஷர்கள் அனைவரும் ஆட்சிக் கட்டிலில் இருந்து, ஒரு வருடத்துக்கு முன்னால் இறங்கினார்கள். அதிலும், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பியோடி மாலைதீவு, சிங்கப்பூர் என்று அலைந்து திரிய வேண்டி வந்தது. இவ்வாறான நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்ட ரணில், ஆட்சியில் ஏறினார்.

ஒரேயொரு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியைக் கொண்டு பாராளுமன்றம் வந்த ஒருவர், பிரதமராக மாறி, இறுதியில் ஜனாதிபதியாகவே அமர்ந்தார். அவர், ராஜபக்ஷர்களை விரட்டும் போராட்டங்களை, தன்னுடைய ஆட்சிக் கனவுக்காக கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆட்சியில் அமர்ந்தவுடன், அதைத் தக்க வைப்பதற்காக ராஜபக்ஷர்களின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டார்.

கிட்டத்தட்ட ராஜபக்ஷர்களின் ‘பினாமி’யாகவே ரணில் ஆட்சியில் ஏறினார். ஆனால், ஆட்சியில் ஏறிய சிறிய காலத்துக்குள்ளேயே, யாரின் ‘பினாமி’யாகவும் இல்லாமல், தனித்த ஆவர்த்தனம் செய்யும் ஓர் ஆட்சியாளனாக தன்னை முன்னிறுத்தும் வேலைகளில் தெளிவாக ஈடுபடலானார்.

தன்னை எந்தக் கேள்வியும் கேட்காதவர்களை மாத்திரம் அமைச்சரவைக்குள் உள்வாங்கிக் கொண்டு, ராஜபக்ஷ விசுவாசிகளை பெரும்பாலும் விலத்தி வைத்தார். இதனை, ஆரம்பத்தில் கண்டுகொள்ளாமல் இருந்தாலும், நீண்டகால அரசியல் நோக்கில் தங்களுக்கு பெரும் பிரச்சினையாக மாறும் என்பதை ராஜபக்ஷர்கள் உணர்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள். அதனால்தான், மஹிந்த மீண்டும் பிரதமராக பதவி ஏற்கப்போகிறார் எனும் தகவல், கடந்த ஆண்டின் இறுதியில் இருந்து அடிக்கடி பரவத் தொடங்கியது.

மஹிந்த மீண்டும் பிரதமராக பதவியேற்றால், பாராளுமன்றமும் அமைச்சரவையும் ராஜபக்ஷர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தங்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதனை, விரைவாக செய்துவிட முடியும்.

அதாவது, தென் இலங்கையில் ராஜபக்ஷர்களுக்கு எதிராக எழுந்த அதிருப்தியைக் கட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். அதுதான், ராஜபக்ஷர்களின் எதிர்கால ஆட்சிக் கனவை தக்க வைக்க உதவும். அப்படியான நிலையில், மஹிந்தவை பிரதமராக பதவியில் அமர்த்த வேண்டிய தேவை, ராஜபக்ஷர்களுக்கும் ராஜபக்ஷர்களின் விசுவாசிகளுக்கும் உண்டு.

இதனை நன்கு உணர்ந்து கொண்டிருக்கிற ரணில், அவ்வாறான சூழ்நிலையொன்று உருவாகுவதைத் தவிர்த்து வருகிறார். தான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷர்களின் ஆதரவோடு வேட்பாளராக போட்டியிடுவது உறுதியாகும் வரையில், ராஜபக்ஷர்களை ஆட்சிக் கட்டிலின் பக்கத்திலேயே அண்ட விடுவதில்லை என்பதில் குறியாக இருக்கிறார்.

ஏனெனில், கடந்த வருடம் தென் இலங்கையில் எழுந்திருந்த ராஜபக்ஷர்களுக்கு எதிரான வெறுப்பு, இப்போது குறிப்பிட்டளவு குறைந்துவிட்டது. அத்தோடு, ராஜபக்ஷர்களின் ‘போர்வாள்’களான பௌத்த அடிப்படைவாத தரப்புகள், தமிழ் - முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத பரப்புரைகளை ஆக்ரோசமாக மீண்டும் தொடங்கிவிட்டன.

குறிப்பாக, ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம்கூட, புலம்பெயர் தேசங்களில் உள்ள புலி ஆதரவாளர்களாலும் மேற்கு நாடுகளின் தூதுவராலயங்களாலும் திட்டமிடப்பட்டது என்பது மாதிரியான செய்திகளை, ராஜபக்ஷ ஆதரவு தரப்புகள் பரப்பி வருகின்றன. இதனால், நாட்டை புலிகளிடம் இருந்து மீட்டுத் தந்த ராஜபக்ஷர்களை மன்னித்து, மீண்டும் ஆட்சியில் அமர்த்தும் நிலையொன்று உருவாக்கிவிடலாம் என்பது மஹிந்தவாதிகளின் நம்பிக்கை. அதற்கு, பௌத்த பீடங்களைக் கொண்டும் அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கடந்த இரு தேர்தல்களிலும் மஹிந்தவின் முகத்தை முன்னிறுத்திக் கொண்டு ராஜபக்ஷர்கள் வாக்கு வேட்டை நடத்தினாலும், கோட்டாவும் பஷில் ராஜபக்ஷவும் வெற்றிக்கான உரித்தைக் கோரினார்கள். மஹிந்தவைக் காட்டிலும், தாங்கள் மக்கள் ஆதரவுள்ளவர்கள் என்ற கட்டத்துக்கு கோட்டாவும் பஷிலும் நகர்ந்தார்கள்.

அதனால், மஹிந்த பிரதமராக இருந்தாலும் கிட்டத்தட்ட செல்லாக்காசாக இருந்தார். அவரின் சொல்லுக்கு மதிப்பு இல்லாமல் போனது. தம்பிமார் நினைத்ததைச் செய்தார்கள். அதிலும், அடுத்த ஜனாதிபதி தேர்தல் கனவோடு பஷில் முன்னுக்கு வந்தார். இதனால், மஹிந்தவுக்கு தன்னுடைய மகனான நாமலின் எதிர்காலம் குறித்த பயம் எழுந்தது. அந்தச் சமயத்தில்தான், ராஜபக்ஷர்களை விரட்டும் போராட்டம் எழுந்து, நிலைமை தலைகிழானாது.

அப்போது, மஹிந்த குறிப்பிட்டளவு மகிழ்ச்சியோடுதான் இருந்தார். ஏனெனில், கோட்டாவையும் பஷிலையும் அரசியல் அரங்கில் இருந்து அகற்றுவதற்கான வாய்ப்பாக அதனைக் கருதினார். அதனால், ரணிலை ஜனாதிபதியாக்குவதற்காக அவர் தலைகீழாக நின்று செயற்பட்டார். அப்போது, ரணிலுக்கும் மஹிந்தவுக்குமான இணக்கப்பாடும் காணப்பட்டதாக கூறப்பட்டது. அது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலை வேட்பாளராக ஆதரிப்பது என்பதுவும், அடுத்த பொதுத் தேர்தலில் ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புகளைத் தனக்கு உருவாக்கித் தரவேண்டும் என்பது மஹிந்தவினது கோரிக்கை. ஆனால், அந்த எதிர்பார்ப்புகளின்படி ரணில் நடக்கவில்லை என்பதுதான் மஹிந்தவின் மனக்குறை.

திட்டமிட்ட ரீதியில், ஜனாதிபதி வேட்பாளராகத் தான் ஆவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் ரணில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாரே அன்றி, பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவை வெற்றிபெற வைத்து, தன்னைப் பிரதமராக்கும் வாய்ப்புகளை உருவாக்க மறுக்கிறார் என்பது மஹிந்தவின் அதிருப்தி.

இதனை ஆரம்பம் முதலே, மஹிந்தவாதிகள் தொடர்ச்சியாக அவரிடம் எடுத்துக் கூறி வருகிறார்கள். அதனால்தான், ஆரம்பத்தில் ரணிலுக்கு எதிராக பெரிதாக எந்த விமர்சனங்களையும் முன்வைக்க வேண்டாம் என்று கட்டுப்பாடுகளை விதித்திருந்த மஹிந்த, இப்போது கண்டுகொள்ளாமல் இருக்கிறார். அத்தோடு, மஹிந்தவாதிகளாலும், அவர்களின் ஊடக வலையமைப்புகளிலும் மஹிந்த, பிரதமராக மீண்டும் பதவி ஏற்கப்போகிறார் என்ற தகவல்களும் திட்டமிட்ட ரீதியாகத் தொடர்ச்சியாக பரப்பப்படுகின்றன.

ராஜபக்ஷர்களுக்கு எதிராக தென் இலங்கை மக்கள் கொண்டிருந்த வெறுப்பை, இரண்டு விதமாக பிரித்தாளும் வேலைகளை, மஹிந்தவாதிகள் தற்போது செய்து வருகிறார்கள். அதில், மஹிந்த நல்லவர், வல்லவர், ஊழல் அற்றவர் என்பது ஒன்று. கோட்டாவும் பஷிலுமே ஆட்சி நடத்தத் தெரியாமல் நாட்டைச் சீரழித்தவர்கள். கோட்டாவும் பஷிலும் செய்த தவறுக்காக மஹிந்தவைத் தண்டிப்பது அர்த்தமற்றது என்பது மற்றையது.

இதன்போக்கில், மஹிந்தவை பிரதமராக்கும் எண்ணமே மஹிந்தவாதிகளின் நோக்கம். ஆனால், இந்த அரசியல் ஆட்டங்களைத் தெளிவாக விளங்கி வைத்திருக்கின்ற ரணில், மஹிந்தவாதிகளின் குரல்களை கண்டும் காணாமல் இருக்கின்றார். அதிலும், எந்தவொர் இடத்திலும் அவர் ராஜபக்ஷர்கள் குறித்து பேசுவதையே தவிர்க்கிறார்.

ரணில் தலைமையில், கடந்த 19ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற போர் வெற்றி விழாவில், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால், போர் வெற்றிக்கான உரித்தைத் தாம் கொண்டிருப்பதாகத் தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் ராஜபக்ஷர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. முப்படையினரையும் நினைவுகூரும் நிகழ்வாக முன்னிறுத்தப்பட்டாலும், அது போர் வெற்றி விழாவாகவே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இப்படியான நிகழ்வில் ராஜபக்ஷர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்பது முக்கிய பேசுபொருளானது. அதில், அந்த நிகழ்வுக்கு அவர்களை, ரணில் திட்டமிட்ட ரீதியில் அழைக்கவில்லை என்ற விடயம் மேலெழுந்தது. அது உண்மையாக இருக்குமாக இருந்தால், மஹிந்தவின் ஆட்சிக் கனவுக்கு ரணில், தற்போதைக்கு கொஞ்ச இடமும் அளிக்கத் தயாரில்லை என்பது தெளிவாகின்றது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு எதுவெல்லாம் உதவுமோ அதையெல்லாம் பக்கத்தில் வைத்துக் கொள்ளவும், இடைஞ்சலாக இருக்கும் விடயங்களை விலத்தி வைக்கவும் ரணில் தயக்க மாட்டார்.

ஆனால், அவருக்கு இருக்கும் சிக்கல் என்னவென்றால், ராஜபக்ஷர்கள் என்ற நாமம், குறிப்பாக மஹிந்த எனும் நாமம், தென் இலங்கையில் வாக்குகளை அள்ளுவதற்கு அவருக்கு தேவையாக இருக்கின்றது என்பதுவும், அது, தமிழ் - முஸ்லிம் மக்களிடம் பிரச்சினைக்குரியது என்பதுதான் பெரிய சிக்கல். அந்தச் சிக்கலைத் தாண்டுவது குறித்து மாத்திரமே ரணில் சிந்திக்கிறார்.

மற்றப்படி, மஹிந்தவின் அரசியல் எதிர்காலம் குறித்தெல்லாம் அவர், எந்தச் சிந்தனையும் கொண்டிருக்கவில்லை.

## கடிதங்கள்

### மன்னார் நகர பஸ் நிலைய பொது மலசல கூட நீர் இணைப்பு துண்டிப்பு

#### மக்கள் அசௌகரியம்

மன்னார் நகர பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள மன்னார் நகர சபைக்குச் சொந்தமான பொது மலசல கூட தொகுதிக்கு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்பட்ட நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த மலசல கூட தொகுதியை உரிய முறையில் மக்கள் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகர சபை, குறித்த மலசல கூடத்தை இவ்வருடம் குத்தகைக்கு விடும் முன்னர், கடந்த வருட நீர் பட்டியலை முழுமைப்படுத்தாது, புதிய நபருக்கு குத்தகைக்கு வழங்கி உள்ளது. இதன் போது, நீர் பட்டியலின் நிலுவை சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேல் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த மலசல கூட தொகுதிக்கான நீர் இணைப்பை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அண்மையில் துண்டித்துள்ளது. மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து, பவுசர் மூலம் நீர் வழங்கப்பட்டு திறக்கப்பட்டது; நீர் முடிவடைந்தவுடன் மூடப்படுகின்றது.

மக்களிடம் கட்டணம் பெற்று பயன்படுத்த விடுகின்ற போதும், உரிய நீர் வசதி இன்றி மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே மன்னார் நகர சபை, குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி, நீர் பட்டியலின் நிலுவை தொகையை செலுத்தி, துண்டிக்கப்பட்ட நீர் இணைப்பை சீர்செய்தால் மாத்திரமே, குறித்த பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எஸ். றொசேரியன் லெம்பேட்





# தலைகீழாக நடப்பது எவ்வகையில் நியாயம்?



"இல்லாதவர்களிடமிருந்து இருப்பவர்களுக்கு பெற்று கொடுக்கும் செயற்பாடே மின் கட்டண அதிகரிப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதாக" குற்றம்சாட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி எம்.ஏ சுமந்திரன், "அதிக மின்னலகை பயன்படுத்துபவர்கள் குறைந்த அளவான கட்டணத்தை செலுத்தவைப்பது எந்த வகையில் நியாயம்" எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியல் அழுத்தத்தின் காரணமாக பதவி விலகினார்கள். அப்போது பாராளுமன்றத்தின் ஊடாக எவரும் பதவி நீக்கப்படவில்லை. ஆனால் ஆணைக்குழுவின் தற்போதைய தவிசாளரை பதவி நீக்கம் செய்யும் பிரேரணை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபை யோசனை முன்வைக்கும் போது, அதனை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிசீலனை செய்து சிறந்த தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். மின்சார சபைக்கும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இடையில் இணக்கமான தன்மை காணப்பட வேண்டும்.

பூஜ்ஜியம் முதல் 30 வரை மின்னலகுகளை பயன்படுத்துவோருக்கு 175 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிக மின்னலகை பயன்படுத்துபவர்கள் குறைந்த அளவான கட்டணத்தை செலுத்துகின்றனர். அதாவது இல்லாதவர்களிடமிருந்து இருப்பவர்களுக்கு பெற்று கொடுக்கும் செயற்பாடு இங்கு நடைமுறைப்படுத்துகிறது. அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்துபவர்களே அதிக கட்டணத்தை செலுத்த வேண்டும். மிகவும் துன்பத்தில் ஏழ்மையில் வாழ்பவர்கள் இதனை அனுபவிக்க கூடாது என்றார்.

# ராஜகுமாரிக்காக சஜித் குரல்



பிரபல கலைஞர் சுதர்மா ஜயவர்தன வீட்டில் பணி செய்த பதுளையைச் சேர்ந்த ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினார்.

குறிப்பாக தோட்டங்களை அண்மித்து வாழும் மக்கள் மிகவும் வறுமையால் நிர்க்கதிகளுக்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்த கொழும்புக்கு வந்த பெண் ஒருவர், சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்து உள்ளதாகவும்,நீதி நியாயம் முறையாக நிலைநாட்டப்பட வேண்டும் எனவும்,இது தொடர்பான சகல விசாரணைகளும் உடனடியாகவும் பக்கச்சார்பற்றதாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு இவ்வாறு வருபவர்களுக்கு நீதி நியாயம் நிலைநாட்டப்படாது என்ற பாரிய சந்தேகம் குடிகொண்டு உள்ளதாகவும், இந்தச் சந்தேகத்தை போக்க பக்கசார்பற்ற விசாரணையை மேற்கொள்ளுமாரும் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) உரையாற்றும் போது கோரிக்கை விடுத்தார்.

# ரயில் சேவைகள் டிஜிட்டல் மயம்



"ரயில்வே திணைக்கள சேவைகளில் நிலவும் மோசடிகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமானால் பொது மக்களுக்கான சேவைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும்.
எனவே எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் ரயில்வே சேவைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்படும்" என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (24) பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியதையடுத்து, இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி அசோக அபேசிங்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "கரையோர ரயில் பாதையில் நான்கு பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும், பிரதான பாதையில் 101 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும், களனிவெளி பாதையில் 30 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும், புத்தளம் பாதையில் 34 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் காணப்படுகின்றன.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பதிலாக தற்காலிக தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பதிலாக, பாதுகாப்பான கடவைகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரயில்வே திணைக்களம் இலாபம் பெறும் நிறுவனமல்ல; கடந்த ஆண்டில் 1,000 கோடி ரூபாய் நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. ரயில்வே திணைக்கள சேவைகளில் நிலவும் மோசடிகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமானால் பொது மக்களுக்கான சேவைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும்" என்றார்.

# அந்தப் பரீட்சையில் தோற்ற சந்தர்ப்பம்



ஆசிரிய நியமனத்திற்காக, தேசிய கல்வியல் கல்லூரிகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாத ஆசிரிய பயிலுநர்களுக்கு மீண்டும் அந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி வேலுகுமார் கேள்வியெழுப்பினார்.

தேசிய கல்வியல் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சித்தியடையாமல் இருப்பதால், அவர்கள் மீண்டும் தோற்றுவதற்கு இன்னும் ஒருவருடம் செல்லும் நிலை இருப்பதால் அதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா? எனக் கேட்டார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், தேசிய கல்வியல் கல்லூரியில் 7,800 பேர் பயிற்சியை நிறைவு செய்து நியமனத்தை எதிர்ப்பார்த்துள்ளனர். அவர்களில் 350 பேர் சித்தியடையாதுள்ளனர். எனவே, 7,500 பேருக்கு நியமனத்தை வழங்கியதன் பின்னர், எஞ்சிய 350 பேருக்கும் மீளவும் அந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்றார்.

# கஜேந்திரனின் சிறப்புரிமை மீறல்



"பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனின் பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இது தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும்" என்று சுமந்திரன் எம்.பி கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் பிரேரணையை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தில் உள்ளவர்கள் மக்களின் நிலைப்பாடு, துன்பத்தை அதிகம் அறிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் செவ்வாய்க்கிழமை அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டார். பலாலி பொலிஸார் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளார்கள். பொலிஸாரின் செயற்பாட்டால் அவருடைய சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்றார்.

# கலையும் கனவுகள்

ஹஸ்பர் ஏ ஹலீம்





பாலம்போட்டாறு பத்தினிபுர கிராம மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. எந்த திசையை நோக்கினாலும் பிரச்சினைகள்தான் நாலாப்புறங்களும் துர்நாற்றம் வீசுகின்றது. நிம்மதியை தொலைத்துவிட்டு அம்மக்கள் அன்றாடம் தேடியலைந்து கொண்டிருக்கின்றனர்.

தாங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அம்மக்கள் பேச தொடங்கினர்.

### ஜீ.விதுர்சியா

பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளர் ஜீ.விதுர்சியா (வயது 27) கருத்துரைக்கையில்,

"எங்களது ஊரில் காட்டு யானைகளின் தொல்லை அதிகம். இதற்கான காரணம் குப்பை மேடுதான். குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக்கோரி பல ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. பஸ் ஏறுவதற்காக காத்திருக்கும் போது இந்தக் குப்பைகளின் துர்நாற்றம் தாங்க முடியாது. அது மட்டுமன்றி, இங்கு பாதுகாப்பான யானை வேலி இல்லை. இந்த யானை பிரச்சினையால் ஊருக்குள் நிம்மதிமாக வாழ முடியாது" என்றார்.

"மாலை 5 மணிக்கே யானை ஊருக்குள் புகுந்து அட்டகாசங்களை மேற்கொள்வதுடன் எங்களது நெற்செய்கை விவசாயம் தோட்டச் செய்கைகளை அழித்து விடுகின்றன. கச்சான் போன்ற பயிர்களையும் துவம்சம் செய்து விட்டு செல்கின்றன. இங்கு குப்பை கொட்டுவதால் அங்குள்ள விலங்குகள் அதனை சாப்பிட்டு விட்டு, ஊருக்குள் வருவதாலும் பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றன. இவற்றில் இருந்து பாதுகாக்க குப்பை மேட்டை அகற்றி பாதுகாப்பான யானை வேலியை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்" என தனது ஆதங்கத்தை ஜீ.விதுர்சியா வெளிப்படுத்தினார்.

### டி.விஜயபாரதி

பாலம்போட்டாறு, பத்தினிபுரத்தை சேர்ந்த தோட்டச் செய்கையில் ஈடுபடும் பெண்ணான டி.விஜயபாரதி வயது (48) தனது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்துகையில் பின்வருமாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவே பாலம்போட்டாறு. இதில் இக்பால் நகர், பத்தினிபுரம் ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. இதனை அண்மித்த கண்டி -திருகோணமலை பிரதான வீதியின் சிங்கபுர எனும் பகுதியில், தம்பலகாமம் பிரதேச சபை மூலம் கொட்டப்படும் குப்பைகள் மூலமாக பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

பிரதான வீதியின் அருகே கொட்டப்படும் குப்பைகளால் பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்வதுடன் அவ்வீதி ஊடாக பயணிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது.

கடந்த பல வருட காலமாக இங்கு கழிவு குப்பைகள் கொட்டப்பட்டு குப்பை மேட்டாக மாறியுள்ளது. இங்கு பிரதேச சபை மூலமான குப்பை, மட்டுமல்ல வீதியால் செல்லும் தனியார் வாகன போக்குவரத்துதாரிகளும் குப்பைகளை வீதி அருகே கொட்டி விட்டு செல்கின்றனர். இதனால் குப்பைகளைத் தேடி யானைகளும் படையெடுப்பதுடன் குறித்த யானைகள் ஊருக்குள் புகுந்து மக்கள் சொத்துகளை நாசமாக்கி விட்டு செல்கின்றன. விவசாயத்தை நம்பியே வாழும் இம் மக்களின் தோட்டப் பயிர்ச் செய்கைகளை அழித்து விட்டு செல்வதாகவும் குற்றஞ்சாட்டினார்.

### விஜயகுமார்

விவசாயியான எஸ்.விஜயகுமார் வயது (52) கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

"பத்தினிபுர கிராமத்தில் தோட்டச் செய்கையில் அதிகமாக ஈடுபட்டு வருகிறோம். இதனை நம்பியே வாழ்வாதாரத்தை மேற்கொள்கிறோம். ஆனால், யானை தொல்லையால் பெரும் நட்டங்களை எதிர் நோக்கியுள்ளோம். இதனால் நிரந்தர யானை வேலியை அமைக்க, உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாக இருந்தால் அச்சத்துடனேயே அனுப்ப வேண்டியுள்ளது. சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகாமம் பகுதிக்கு பிள்ளைகள் வகுப்புகளுக்கு சென்று வரவேண்டும். இதனால் யானை வந்திடுமோ என்ற பயம் எமக்குள் வீடு வந்து சேரும் வரை மனது படபடக்கிறது.

இது இவ்வாறு, இருக்க இப்பகுதியில் ஜெயபுரத்தில் குப்பை மேடு உள்ளது. இதனை அண்டியும் பிரதான வீதியை கடந்தும் எங்கள் ஊருக்குள் யானை வருகிறது. அருகாமை கிராமத்தில் உள்ள விலாங்குளம் பகுதியில் யானை வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டதை போன்று நிரந்தரமான, பாதுகாப்பான யானை வேலியை அமைத்துத் தாருங்கள்.

பல வருட காலமாக மக்கள் ஆரம்பம் முதல் இந்தக் கிராமத்தில் நெற் பயிர்ச் செய்கை,தோட்டச் செய்கைகளான கத்தரி, வெண்டி, மரவள்ளி, கச்சான் உட்பட பல மேட்டு நிலப் பயிர்களையும் செய்து, தங்களது வாழ்வாதார தொழிலாகவும் இலாபமீட்டி வருகின்றனர். ஆனால் இதனை பாதுகாப்பது அவர்களுக்கு சவாலான விடயமாகவே உள்ளது. தினமும் இந்த யானை தொல்லையால் நிம்மதியாக தூக்கமின்றியும் குடியிருப்பு பகுதிக்குள் யானை வருமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. யானை தாக்குதலில் 2022ஆம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டுக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டதுடன் ஐந்துக்கும் மேற்பட்ட யானைகளும் உயிரிழந்துள்ளன.

கடந்த வருடம் 2,500 மரவள்ளி நாட்டியிருந்தேன். அதனை யானைகள் அழித்து விட்டன. இதனால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. யானைக்கு வெடி வைக்கவா முடியும்? இல்லையே! இதனை கட்டுப்படுத்தி தாருங்கள். மேலும் குப்பை மேட்டினால் தான் இந்த யானை எங்களது ஊரை நோக்கி, ஊருக்குள் படையெடுத்து பயிர்களையும் நாசமாக்குகிறது" என்றார்.

மக்கள் தங்களது உயிரை துச்சமென மதித்து பல போராட்டங்களுக்கு மத்தியில் யானை - மனிதன் மோதல் என்ற சவாலுக்குள் முகங்கொடுத்து வாழ்கின்றார்கள். இயற்கை இனங்களின் விலங்கினங்களை பாதுகாப்பதும் பொறுப்பாகவுள்ளது. ஆனாலும் இந்த மனித - யானை மோதல் முடிவுக்கு வருவதென்பது கடினமான ஒன்றாகும்.



ஜீ. விதுர்சியா



எஸ். கௌரி



டி. விஜயபாரதி



எஸ். விஜயகுமார்

### கௌரி

பத்தினி புர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ்.கௌரி கருத்துரைக்கையில் கூறியதாவது:

"பாதுகாப்பான யானை வேலி இன்மை குறைபாடாக உள்ளது. வனஜீவராசிகள் திணைக்களம் மூலமாக அமைக்கப்பட்ட அநேகமான வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பின்றியும் காணப்படுகின்றன. இரவில் குடியிருப்பு பகுதிகளில் பயிரினங்களை பாதுகாப்பதா நிம்மதியாக தூங்குவதா என்ற வினா இப்பிரதேச மக்களின் காணப்படுகின்றது.

இந்தக் குப்பை மேடு மூலமாகவே யானைகள் ஊருக்குள் வருவதுடன் குப்பைகளை கொட்டுவோர் வீதியின் அருகே கொட்டி விட்டு செல்கின்றனர். தம்பலகாமம் முழுவதுமாகச் சேரும் கழிவுகளை, இங்கு கொட்டுவதனால் அதிகமான நாய் இனங்களும் பெருக்கமடைந்து காணப்படுகின்றன. எங்களுக்கு பாதுகாப்பான யானை வேலி தேவை என்பதுடன் குப்பை மேட்டை அகற்ற வழி செய்யுங்கள்" என தனது கருத்தை உரத்த குரலில் வெளிப்படுத்தினார்.

தீர்வு வேண்டி மக்கள் இது தொடர்பில் போராட்டங்களை முன்னர் நடத்தியிருந்தாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாக காணப்படுகிறது.

குப்பை மேட்டால் ஓரிரு பிரச்சினைகள் மாத்திரமல்ல, ஒட்டு மொத்தமாக சூழல் மாசடைவு உட்பட பல பாதகமான தாக்கங்களை உண்டுபண்ணுகிறது. இதனால் குறித்த வீதியில் பயணிக்கும் பாதசாரிகள், அதனை அண்டியுள்ள குடியிருப்பு பிரதேச மக்களும் பாதிக்கப்படலாம். இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வின்றியே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். யானை - மனித மோதல் ஏற்கெனவே இருந்து வந்தாலும் குப்பை மேட்டினால் மேலும் இக் காட்டு யானை தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

எனவே, இம் மக்களின் பிரச்சினைகளாக யானை தொல்லை, குப்பை மேட்டை அகற்றுதல் தொடர்பில் எப்போது தீர்வு கிட்டும் என இம் மக்களின் ஏகோபித்த ஒரே ஓர் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

அமெரிக்கா

# மூழ்கும் நிலையில் நியூயோர்க்

வானுயர்ந்த கட்டடங்களின் அழுத்தம் காரணமாக, அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் மூழ்கி வருவதாக, ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

'ஏர்த் ஃப்யூச்சர்' என்ற இதழில் இதுகுறித்த ஆய்வு தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. நியூயோர்க் நகரில் உள்ள ஐந்து முக்கிய பகுதிகளில், சராசரியாக 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் உள்ளன.

அவை, தோராயமாக 1.7 ட்ரில்லியன் இறாத்தல் எடை அளவிலான அழுத்தத்தை பூமிக்கு கொடுக்கின்றன. இவற்றின் காரணமாக, ஆண்டு ஒன்றுக்கு 1 முதல் 2 மில்லி மீற்றர் அளவு, நியூயோர்க் நகரம் மூழ்கிவருவதாகக் கூறப்படுகிறது.

செயற்கைக்கோள் தரவுகள் மூலம் இந்த ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளன.



புவி வெப்பமயமாதல் காரணமாக, கடல் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், நியூயோர்க் நகரத்துக்கு வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலி

## முதியவரை ஊன்றுகோலால் அடித்துக் கொன்ற கடற்படை அதிகாரிகள்




சிலி நாட்டில் சாலையோரம் வசித்து வந்த மாற்றுத் திறனாளி முதியவரை, கடற்படை அதிகாரிகள் சிலர் ஊன்றுகோலால் அடித்துக் கொன்ற சம்பவம் சிலியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக்யுக் நகரின் வீதி ஒன்றில் தங்கியிருந்த கொலம்பிய நாட்டைச் சேர்ந்த மில்டன் டொமிங்குவேஸ்மோரேனோ என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தன்று, காரில் வந்திறங்கிய கடற்படை அதிகாரிகள் சூழ்ந்துகொண்டு, மில்டன் வைத்திருந்த ஊன்றுகோலை எடுத்து அவரை தலையில் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி, அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு அதிகாரிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## இந்தக் கடிகாரம் யாருடையது தெரியுமா?



சீனாவின் கடைசி பேரரசருக்கு சொந்தமான கைக்கடிகாரம் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் நடைபெற்ற ஏலத்தில், சீனாவின் கிங் வம்சத்தின் கடைசி மன்னரான Aisin-Gioro Puyiக்குச் சொந்தமான 'படேக் ஃபிலிப்' (Patek Philippe) கைக்கடிகாரம் வைக்கப்பட்டிருந்தது.


மேலும் இது மூன்று மில்லியன் டொலர் வரை ஏலம் போகும் என எதிர்பார்பார்க்கப்பட்ட நிலையில், ஏலம் தொடங்கிய ஐந்தே நிமிடத்தில் 5 மில்லியன் டொலருக்கு விற்பனையாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## குழந்தையின் உயிரைப் பறித்த போதை

காரில் தனியாக விட்டுச் செல்லப்பட்ட இரண்டு வயது பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புளோரிடாவை சேர்ந்த கத்ரீன் - கிறிஸ்டோபர் தம்பதி, அளவுக்கு அதிகமான போதையில் தங்களது இரு குழந்தைகளை காரிலேயே மறந்து விட்டுவிட்டு வீட்டுக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது.




காரில் சிக்கி இருந்த குழந்தைகளை 15 மணி நேரத்திற்கு பிறகு போதை தெளிந்து பார்த்த போது, இரண்டு வயது குழந்தை உடல் வெப்பம் அதிகரித்ததால் உயிரிழந்தது.

இந்நிலையில் குழந்தைகளின் பெற்றோரைக் கைது செய்த பொலிஸார், நான்கு வயதான மற்றொரு குழந்தையைக் காப்பகத்தில் சேர்த்துள்ளனர்.

சேலம்

## மகளுக்காக உயிரை விட்ட தந்தை



மகளைக் காப்பாற்றுவதற்காகத் தந்தையொருவர் உயிரிழந்த சம்பவம் சேலத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பைத்தூரைச் சேர்ந்த கணேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று அவரது மகளுக்கும் மகனுக்கும் இடையே தொலைக்காட்சி பார்ப்பதில் தகராறு எழுந்ததாகவும், இதனால் ஆத்திரமடைந்த கணேசன் இருவரையும் திட்டி விட்டு கோபத்தில் தொலைக்காட்சி ரிமோட்டை உடைத்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் மனம் உடைந்த மகள் வீட்டில் இருந்த கிணற்றில் குதித்துள்ளார். இதையடுத்து மகளைக் காப்பாற்ற கணேசனும் கிணற்றில் குதிக்கவே அருகில் இருந்தவர்கள் இருவரையும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் இருவரையும் சடலமாக மீட்டனர்.

கர்நாடகா

## சட்டப் பேரவையில் கோமியப் பூஜை

கர்நாடக சட்டப்பேரவை வளாகத்தை காங்கிரஸ் கட்சியினர், கோமியம் தெளித்து தூய்மைப்படுத்திய சம்பவம் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகாவில் புதிய எம்.எல்.ஏக்கள் பதவியேற்பதற்கான சட்டப்பேரவைக் கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியுள்ள நிலையில், சட்டப்பேரவை வளாகம் முழுவதும் காங்கிரஸ் நிர்வாகிகள் பசுவின் கோமியம் தெளித்து பூஜை செய்துள்ளனர்.

நடந்து முடிந்த கர்நாடக சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி அதிக பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைத்த பிறகு, முதன்முறையாக சட்டமன்ற கூட்ட தொடர் கூடியுள்ளது.

அதற்கு முன்னதாக கட்சியின் முக்கிய



பிரமுகரான மனோகர் தலைமையில், புனித நீர் தெளித்து, விதான்சௌதா வளாகத்தில் காங்கிரஸ் கட்சியினர் பூஜை செய்தனர்.

இதன் மூலம் சட்டப்பேரவையை தூய்மைப்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எனினும் காங்கிரஸ் கட்சியினரின் இச் செயலை பாரதிய ஜனதா கட்சி கடுமையாகச் சாடியுள்ளது.

சென்னை


## பேனாவுக்குத் தடை ?

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவாக மெரினா கடலில் பேனா சிலை வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மெரினா கடலில், கருணாநிதி நினைவாக, பேனா நினைவு சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்தது. எனினும் பேனா சின்னம் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி, அ.தி.மு.க மற்றும் மீனவர் அமைப்பு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், மதுரையை சேர்ந்த கே.கே. ரமேஷ், புதிய மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில், மெரினா கடலில் பேனா சிலை வைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் எனவும்,



நாடு முழுவதும் கடல் அரிப்பை தடுக்கும் விதமாக கடற்கரை அருகே மரங்களை நட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# ஐ.பி.எல்: இறுதிப் போட்டியில் சென்னை

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரின் இறுதிப் போட்டிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டன்ஸுடனான முதலாவது தகுதிகாண் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு சுப்பர் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டைட்டான்ஸ்

சுப்பர் கிங்ஸ்: 172/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 60 (44), டெவோன் கொன்வே 40 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 2/28 [4], மோஹித் ஷர்மா 2/31 [4], நூர் அஹ்மட் 1/29 [4])

டைட்டான்ஸ்: 157/10 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 42 (38), ரஷீட் கான் 30 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 2/18 [4], மகேஷ் தீக்ஷன 2/28 [4], தீபக் சஹர் 2/29 [4])

போட்டியின் நாயகன்: ருத்துராஜ் கைகவாட்ட்

குவாட்ரேங்கில் கோல்ப் சாம்பியன் தொடர்

# இலங்கை விமானப்படை வசம்




இலங்கை விமானப்படை ஈகிள் கோல்ப் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு SLT மொபிடல் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற குவாட்ரேங்கில் கோல்ப் தொடரில் பங்குபற்றி வெற்றியீட்டிய ஆண் மற்றும் பெண் போட்டியாளர்களுக்கான கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பங்கேற்பில் சீனக்குடா விமானப்படை தளத்தில் அமைந்துள்ள ஈகிள் கோல்ப் அமைப்பில் இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளோடு இணைந்து சீனக்குடா ஈகிள் கோல்ப் மைதானத்தில் 'The Commanders Island Green' எனும் பெயரில் புதிய கோல்ப் மைதான தொகுதி, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவால் திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் தொடரில் இலங்கையின் முன்னணி கோல்ப் கழகங்களான விமானப்படை ஈகிள் கோல்ப் கழகம், றோயல் கொழும்பு கோல்ப் கழகம், விக்டோரியா கோல்ப் கழகம், நுவரெலியா கோல்ப் கழகம் ஆகியவை சார்பாக வீரவீராங்கனைகள் பங்குபற்றினர்.



இந்த தொடரில் 325 போனஸ் புள்ளிகளை பெற்று இலங்கை விமானப்படை ஈகிள் கோல்ப் கழகம் ஒட்டுமொத்த தொடரின் வெற்றியை தன்வசப்படுத்தியது.

இந்தத் தொடரில் சிறந்த குறுந்தூர 'ஷாட்' வெற்றியாளராக விமானப்படை ஈகிள் கோல்ட் கழகத்தின் எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவுக்கு வழங்கப்பட்டது. சிறந்த நெடுதூர 'ஷாட்' வெற்றியாளராக நுவரெலியா கோல்ப் கழகத்தின் மைக்கேல் சத்தியசிவத்துக்கு வழங்கப்பட்டது. சிறந்த குறுந்தூர 'ஷாட்' மகளிர் பிரிவில் கோப்பையை நுவரெலியா கோல்ப் கிளப்பின் பிரான் டி மெல் வென்றார். மற்றும், சிறந்த நெடுதூர 'ஷாட்' வெற்றியாளராக ரோயல் கொழும்பு கோல்ப் கிளப்பின் டினுகா பொரலஸ்ஸ வென்றார்.



## அல் நஸாரிலிருந்து வெளியேறும் ரொனால்டோ?

சவுதி அரேபிய கால்பந்தாட்டக் கழகமான அல் நஸாரிலிருந்து அக்கழகத்தின் முன்களவீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ வெளியேற விரும்புவதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பாவுக்குத் திரும்ப 38 வயதான ரொனால்டோ எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.



## கல்முனையில் பிரபல கே.பி.எல் தொடர் ஆரம்பம்

வி.ரி. சகாதேவராஜா

நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தி வரும் கே.பி.எல் எனும் மாபெரும் கிரிக்கெட் தொடரானது, கல்முனை உவெஸ்லி மைதானத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்தொடரில் கல்முனையின் 10 பிரபலமான அணிகள் கலந்து கொள்கின்ற நிலையில் அடுத்த மாதம் 10ஆம் திகதி இறுதிப் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 25 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.